www.tamilarangam.net

ஜேர்மன் வாழ் தமிழ் மக்களுக்கு,

ஜேர்மன் சமஷ்டிக் குடியரசில் தமிழர்களுக்கு உள்ள பதட்டநிலை குறித்து நீங்கள் அனைவரும் அறிந்திருப்பீர்கள் என நம்புகிறேன். அதாவது தற்போது டுல்டுங் (Duldung) விசாவில் வசிப்பவர்களுக்கு பல வெளிநாட்டு அலுவலகங்களினால் 30.6.91 ந்திகதி மட்டுமே விசா வழங்கப் பட்டுள்ளது. இவர்களுக்கு குறிப்பிட்ட கால அனுமதி கிடைத்து எங்கள் நாட்டிற்கு திருப்பி அனுப்பப்படுவார்களா? அல்லது தொடர்ந்தும் டுல்டுங் (Duldung) விசா வழங்கப்படுமா என்பது பற்றிய விபரம் வெளிநாட்டு அலுவலகங்களுக்கு 20.6.91ல்தான் தெரியவரும். இம்முடிபு எங்களுக்குப் பாதகமாக அமையுமாயின் (திருப்பி அனுப்பப்படுவார்கள்) இந்நிலை தனிய டுல்டுங் (Duldung) இல் இருப்பவர்களுக்கு மட்டுமல்ல சகல தமிழ்மக்களுக்கும் பாதகமான முடிவாக் இருக்கலாம். இதற்கு எதிராக Mülheim/Ruhr வசிக்கும் தமிழர்களாகிய நாங்கள் எங்கள் எதிர்ப்பைக் காட்டுமுகமாக 17.7.91 (புதன்கிழமை) BONN நகரில் மௌன ஊர்வலம் ஒன்றை நடத்த முன்வந்துள்ளோம். இப்பிரச்சினையானது தனிமனிதர் ஒவ்வொருவரையும் பாதிப்பதால் ஒவ்வொருவரும் தங்களது ஒத்துழைப்பை அளிப்பீர்கள் என எதிர்பார்க்கின்றோம். ஆகவே ஒவ்வொரு இடத்திலுள்ளவர்களும் ஒன்றாகக்கூடி இவ் ஊர்வலத்தில் எவ்வாறு கலந்து கொள்ளலாம் என்பதை ஒழுங்கு செய்யுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

இவ்வூர்வலத்தில் கொண்டு செல்வதற்கான சுலோக அட்டைகளை உங்கள் கருத்துக்களின்படி ஜெர்மன் மொழியில் தயார் செய்யுமாறு கேட்டுக் கொள்ளுகிறோம். ஊர்வலத்தின் முடிவில் உள்நாட்டு அமைச்சரிடம் அறிக்கை (மகஜர்) கையளிக்கப்படும். இவ்வாறு தயாரிக்கப்பட்ட மகஜரின் பிரதிகள் உங்கள் கையொப்பத்துக்காக அனுப்பிவைக்கப்படும். அதில் எல்லோருடைய(ஜெர்மன் உள்பட) கையொப்பங்களை சேகரிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம். இவ்வூர்வலத்தில் பெண்கள் குழந்தைகள் உட்பட கலந்து கொள்வது மிக முக்கியமாக அமைகின்றது.

மேலதிக விபரங்களுக்கு கடிதமூலமும் தொலைபேசி மூலமாக தொடர்பு கொள்வதோடு உங்கள் ஆலோசனைகளையும் வழங்கலாம்.

முக்கிய குறிப்பு :-
ஊர்வலம் ஆரம்பமாகும் நேரம் :- 12 மணி
குறிப்பிட்ட நேரத்தில் ஊர்வலம் ஆரம்பிக்க வேண்டிய கட்டாயம் இருப்பதால் எல்லோரையும் 12 மணிக்கு முன்பு வந்து சேரும்படி கேட்டுக்கொள்கின்றோம்

தொடர்புகளுக்கு:- 0208 - 32745 மாலை 18.00 - 22.00 வரை.
0208 - 40 70 59 காலை 8.00 - 10.00 வரை.
(தொலைபேசி நேரம் மிகமுக்கியம்)

கடிதத் தொடர்புகளுக்கு:- Frau Annette Faßbender, Flüchtlingsreferentin
Kirchenkreis An der Ruhr, Althofstr. 4.
4330 Mülheim an der Ruhr, Tel. 0208 / 3003217
Mo + Mi 9-13 Uhr

மேற்குறிப்பிட்டபடி 20.06.91ல் வெளிநாட்டு அலுவலகங்களுக்கு தெரிய வரும் என்ற முடிவு எங்களுக்கு பாதகமாக அமைந்துள்ள படியால் (திருப்பிஅனுப்பபடுவோம்), நாங்கள் கூறியபடி **17,7,91 புதன்கிழமை BONN** நகரில் மௌன ஊர்வலத்தை நடத்த முன்வந்துள்ளோம். மீண்டும் வலியுறுத்துகின்ரேம் இப்பிரச்சனையானது தனிமனிதர் ஒவ்வொருவரையும் பாதிப்பதால் இங்கு வாழும் முழு தமிழர்களினதும் ஒருமித்த எதிர்ப்பை அரசாங்கத்திற்கு காட்டுவது மிகமுக்கியமாக அமைகின்றது.

ஆகவே பெண்கள் குழந்தைகள் உட்பட இங்கு **வாழும்** ஒவ்வெருவரும் தங்களது முழு ஒத்துழைப்பையும் வழங்கி இவ் ஊர்வலத்தில் கலந்து கொண்டால்தான் எங்களது இந்த முதல் முயற்சியில் நன்மை ஏற்படும் என நம்புகிரேம்.
இவ் ஊர்வலத்தில் கலந்து கொள்ள அந்நகரை விட்டு வெளியேற அனுமதி இல்லாதவர்கள் உடனடியாக உங்கள் வெளிநாட்டலுவலகங்களில் அனுமதிக்கு விண்ணப்பிக்கவும்.அனுமதிக்கு விண்ணப்பிப்பது முக்கியம். அனுமதி அவர்கள் தரமறுத்தாலோ அல்லது தராவிட்டாலோ கவலைப்பட வேண்டியதில்லை. நீங்கள் ஊர்வலத்தில் கலந்து கொள்ளலாம். அதற்குரிய நடவடிக்கைகளை எங்கள் சட்டத்தரணிகள் முலம் செய்துள்ளோம்.
ஊர்வலம் ஆரம்பிக்கும்இடமும்,செல்லும்பாதையும், சென்றடையும் இடமும், பஸ்வண்டிகள் நிற்பாட்டும் இடமும், **Autobahn Ausfahrt** முதலியவை பின்பக்கமுள்ள போக்கு வரத்து சாலைப்படத்தில் காட்டப் பட்டுள்ளது.
மேலதிக விபரங்களுக்கு மேலே உள்ள தொலைபேசிகள்,விலாசம் ஆகியவைகளில் தொடர்புகொள்ளவும்.

Kopie an: UNHCR, amnesty international,
Flüchtlingsräte, Caritas,
Diakonische Werke, DRK

இங்ஙனம்
**Mülheim** வாழ் தமிழ்மக்கள்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்